பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 24 | திங்கட்கிழமை | 11.12.2023 | அதிர்வு 132

**உலகத் தமிழர் பேரவையின்**

## இமயமலைப் பிரகடனத்துக்கு எதிராக ரெலோ போர்க்கொடி

(எஸ்.நிதர்ஷன்)

"தனி நபர்கள் தமக்குள் பொறுப்பற்ற பிரகடனங்களை உருவாக்கி அவற்றைத் தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக முன் மொழிய முற்படுவது 06



# மின் துண்டிப்பு குறித்து நீதியான விசாரணைகள்

## நாடாளுமன்றில் அரசு உறுதி



"நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மின் துண்டிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சு மட்டத்தில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட தரப்பினர் தொடர்பில் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கின்றோம்."

- இவ்வாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார். 06

## பதுளையில் மண்சரிவு!

### 11 வீடுகள் சேதம்; 141 பேர் இடம்பெயர்வு



பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 06

## உலகத் தமிழர் பேரவையைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்த கஜேந்திரகுமார்

(எஸ்.நிதர்ஷன்)



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் சந்திப்பதற்குக் கேட்டபோது அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்துப் பதில் வழங்கியுள்ளார்.

இருவருக்கும் இடையில் 03

## மட்டக்களப்பில் மீன்பிடிக்கச் சென்ற இருவர் மூன்று நாள்களாக மாயம்!

### தொடர்கின்றது தேடுதல் பணி



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு – கல்குடா, கல்மடு பிரதேசத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இருவர் காணாமல்போயுள்ளனர்.

அவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கல்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர். 06




பிரிகேடியர் தரத்தில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவருக்கு சுமார் மூன்று வருடங்களுக்கு முந்திய திகதியில் இருந்து மேஜர் ஜெனரல் பதவி உயர்வு வழங்கும்படியும் அதற்குரிய சம்பள நிலுவையையும் வழங்குமாறும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேயிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

பிரிகேடியர் சந்தன ரணவீரவுக்கே 03

# வட் வரி திருத்தச் சட்டமூலம் இன்று மீளச் சமர்ப்பிக்கப்படும்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

வட் வரி திருத்தச் சட்டமூலம் இன்று மீண்டும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இன்று அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ளவுள்ளதாகவும் அவர் அறிக்கையொன்றினூடாகக் கூறியுள்ளார்.

இந்தச் சட்டமூலம் கடந்த ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பொருள்கள் தொடர்பான பட்டியல் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பொருள்கள் பட்டியலைக் கோரி எதிர்க்கட்சியினர் நேற்று அநாவசியமான பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்கு முயற்சித்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வட் வரி திருத்தச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், கோரமின்மையால் இது தொடர்பான விவாதம் இடைநடுவே நிறுத்தப்



பட்டதுடன், நாடாளுமன்ற சபை நடவடிக்கைகள் இன்று காலை 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

# களனிப் பல்கலையில் மூடப்பட்டிருந்த மூன்று பீடங்களும் இன்று மீளத் திறப்பு




களனிப் பல்கலைக்கழகத்தில் மூடப்பட்டிருந்த 3 பீடங்களின் கல்வி நடவடிக்கைகளும் இன்று மீள ஆரம்பமாகவுள்ளன.

அதற்கமைய, வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ பீடம், விஞ்ஞான பீடம், கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம் என்பவற்றின் கல்வி நடவடிக்கைகள் இன்று மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

மானுடவியல் மற்றும் சமூகவியல் பீடத்தை எதிர்வரும் 18 ஆம் திகதி திறக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தின் குறித்த 4 பீடங்களும் கடந்த 4 ஆம் திகதி மூடப்பட்டன.

பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதலை நடத்தியமை, மேலும் இரு அதிகாரிகளைக் கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்தமை தொடர்பான சம்பவங்கள் பதிவானதையடுத்து இந்த 4 பீடங்களின் கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டன.

# பதுளை – பண்டாரவளை வீதியில் கனரக வாகனம் பயணிக்கத் தடை





பதுளை – பண்டாரவளை வீதி, நேற்று மாலை முதல் கனரக வாகனங்களுக்காக மாத்திரம் மறு அறிவித்தல் வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06 ஆம் கட்டைப் பகுதியில் நிலவும் மண்சரிவு அபாயத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று பதுளை மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் ஈ.எம். எல். உதயகுமார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை விடுத்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் எல்ல மற்றும் ஹல்துமுல்ல பகுதிகளுக்கு முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கண்டி மாவட்டத்தின் உடுதும்பர, உடபலாத்த மற்றும் மெததும்பர ஆகிய பகுதிகளுக்கும் முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகம மற்றும் பொல்கஹவெல, மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல அம்பன்கங்க கோரலே மற்றும் லக்கல பல்லேகம ஆகிய பகுதிகளுக்கும் முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நுவரெலியா மாவட்டத்தில் ஹகுரன்கெத்த. இரத்தினபுரி மாவட்டத்தில் கலவானை மற்றும் குருவிட்ட ஆகிய பிரதேசங்களுக்கு முதல் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிச் சாவு

நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நமுனுகுல – பூட்டாவத்த பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று நமுனுகுல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மொனராகலை, அலியாவத்த பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தமது உறவினர் வீட்டுக்கு சென்றிருந்த இளைஞர், மேலும் இரண்டு இளைஞர்களுடன் அந்தப் பகுதியிலுள்ள நீரோடையொன்றில் நேற்று முற்பகல் நீராடச் சென்றுள்ளார்.

அதன்போதே, அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## உலகத் தமிழர் பேரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிமாறப்பட்ட குறுந்தகவல்கள் வருமாறு:–

சுரேந்திரன்:– அன்புள்ள கஜேன். இது உலகத் தமிழர் பேரவையிலிருந்து சுரேந்திரன். நான் உங்களை எப்போது அழைப்பது வதியாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கவும். நன்றி.

கஜேந்திரகுமார்:– சுரேந்திரன், உங்களோடும் உங்கள் குழுவில் உள்ளவர்களோடும் பேச ஒன்றுமில்லை. யுத்தம் முடிவடைந்த காலத்திலிருந்து இந்த அரசு மக்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கியே வந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்பு மாவீரர் வாரத்தில் மக்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கட்டவிழ்த்துவிட்டு தொடர்ந்து கைது செய்து வருகின் றனர். குறிப்பாக பாரிய அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டிய காலகட்டத்தில், அதுவும் தாயகத்தில் இருந்து ஒரு அமைப்புடன் கூடக் கலந்தாலோசிக்காமல் அரசுக்கு வெள்ளையடிக்கும் வேலையையே செய்தீர்கள். தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் நலன்களுக்கு எதிராக உங்கள் அமைப்பு பல ஆண்டுகளாகப் போதுமானளவு செய்துள்ளது. இவை உங்கள் சமீபத்திய நடத்தையில் எதுவும் மாற்றமில்லை என்பதையே காட்டுகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேஜர் ஜெனரல் பதவியை 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் விதத்தில் வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை

நீதியரசர் நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் சமத் மொரேயஸ் ஆகியோரைக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வே இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. அரசமைப் பின் 140 ஆவது சரத்தின் அடிப்படையில் பிரிகேடியர் ரணவீர வினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு தொடர்பாகவே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலையீட்டின் பேரில் இதற்கு முன்னர் எந்தவொரு இராணுவத் தளபதிக்கும் நீதிமன்றத்தினால் இவ்வாறான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் இருந்ததில்லை என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கிய வுடன் இராணுவம் அதற்கு கட்டுப்படும் என மனித உரிமைகள் ஆணையகம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லியனகேவிடம் இருந்து உறுதிமொழி பெற்றுள்ளதாக சட்டத் தரணி கூறினார். ஆனால் அது நடக்குமா என்பதுதான் இப்போது கேள்வி.

பிரிகேடியர் ரணவீர இப்போது நெலும் பொகுன மஹிந்த ராஜபக்ஷ அரங்கின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றுகிறார்.

இந்த அதிகாரிக்குப் பின்னால் வந்த பலருக்கு மேஜர் ஜெனரல் பதவி உயர்வு வழங்கப்பட்ட போதும் வேண்டு மென்றே ரணவீர ஒதுக்கப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

இராணுவத்தில் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேயிற்கு அடுத்த நிலையில் உள்ள இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பதவி தற்போது வெறுமையாக உள்ளது.

இப்போது நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு நடைமுறைப்படுத் தப்பட்டு, உரிய பதவியுயர்வு ரணவீரவுக்கு பழைய திகதியி லிருந்து வழங்கப்படுமானால் சேவைமூப்பின் அடிப்படை யில் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரி பதவி அவருக்கே வழங்கப்பட வேண்டும்.

அந்தப் பதவி அவருக்கு வழங்கப்படாவிட்டால் மேஜர் ஜெனரல் லியனகே 31 டிசம்பர், 2023 இல் ஓய்வு பெறுவார்.

அந்தப் பதவியுயர்வு வழங்கப்பட்டால் அதந் பின்னர் அவர் இராணுத் தளபதியாகக் கூட வர வாய்ப்புண்டு.

ஆனால், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக இராணுவத் தலைமையகம் உயர் நீதிமன்றத்தை நாடுவதற் கான சாத்தியமே அதிகம் உண்டு. அப்படி நடந்தால் சேவை யில் இருக்கும் போது இந்தப் பதவியுயர்வைப் பெறாமலேயே அவர் ஓய்வு பெற வேண்டியது தவிர்க்க முடியாததாகி விடும்.

இராணுவத்திலும் உள்ளரசியல் ஒன்று உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது.



# மட்டு. மயிலத்தமடு அத்துமீறல்கள் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும்

## சபையில் அலிஸாஹிர் மௌலானா எம்.பி. சுட்டிக்காட்டு

**“மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மேய்ச்சல் தரை பிரச்சினைகள் மிகவும் பிரதானமானதாகும். குறிப்பாக மயிலத்தமடு - மாதவனை பிரதேசத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்கள் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது.”**



– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தில் கமத்தொழில் அமைச்சு மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பு செய்கின்ற விவசாயிகள் தமது தொழில் முயற்சியில் பல்வேறு தடைகளையும் இன்னல்களையும் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

அரசால் வழங்கப்படும் உர மானியம் உரிய வேளைக்கு விவசாயிகளை சென்றடைவதில்லை. உரிய காலத்தில் பயிர்களுக்குப் போதியளவு உரம் இடுவதற்கு விவசாயிகள் மிகவும் சிரமங்களையும் பொருளாதார கஷ்டங்களையும் அனுபவிக்கின்றனர். எதிர்வரும் காலங்களில் உர மானியத்தை உரிய வேளையில் விவசாயிகளுக்கு வழங்க அரசு நவடிக்கை எடுக்க வேண்டும்.

அறுவடை காலத்தில் நெல்லுக்கு ஸ்திரமான விலையின்மை காரணமாக விவசாயிகள் பெரிதும் கஷ்டமும் கவலையும் அடைகின்றனர். அறுவடைக் காலத்தில் நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட விலையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். எமது மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபையோ பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களோ அறுவடை காலத்தில் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதில்லை. இதன் காரணமாக விவசாயிகள் தனியாருக்கு குறைந்த விலையில் தமது நெல்லை விற்பனை செய்து பாரிய நஷ்டமடைகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லை கட்டுக்கடங்காமல் அதிகரித்து காணப்படுகின்றது. விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர். சேனைப் பயிர் நிலங்களும் நெல் வயல்களும் வயல் வாடிகளும் காட்டு யானைகளால் சேதப்படுத்தப்படுகின்றன. அடிக்கடி மனித உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன.

விவசாயிகள் மீன்பிடியாளர்கள் கால்நடை பண்ணையாளர்கள் எனப் பலர் இறந்திருக்கின்றனர். இதற்கான தீர்வாக காட்டு யானை அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களுக்கு மின்சார வேலி அமைக்கப்பட வேண்டும். வன ஜீவராசிகள் திணைக்களம் இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடை பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் மேய்ச்சல் தரை பிரச்சினைகள் மிகவும் பிரதானமானதாகும். கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை வர்த்தமானி மூலம் அடையாளப்படுத்துவதற்கான முயற்சிகள் நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் மாதவனை - மயிலத்தமடு பிரதேசத்தில் இடம்பெறுகின்ற அத்துமீறல்கள் இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பாடாகவே பார்க்கப்படுகின்றது. இதனுடைய எதிர்விளைவாக மகோயா பகுதியில் உள்ள கால்நடைப் பண்ணையாளர்களுடன் இராணுவத்தினர் மிகவும் இறுக்கமாக நடந்துகொள்வது தவிர்க்கப்படவேண்டும். இந்தக் கால்நடை பண்ணையாளர்களுக்கு எதிரான முரண்பாடுகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.

# வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய படகு



(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கு – பொற்பதி பகுதியில் படகு ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

அந்தப் படகு கரை தட்டுவதைக் கண்ட பிரதேச மீனவர்கள், பருத்தித்துறை பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்புக்களுக்கு அறிவித்ததையடுத்து மேற்படி படகைக் கரையேற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த படகு மாதிரி இலங்கையில் பயன்படுத்துவது இல்லை என்றும், இது இந்தியப் படகாக இருக்கலாம் என்றும் பிரதேச மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.




# வவுனியாவில் இளைஞர் மாநாடு

(கி.வசந்தரூபன்)

வடக்கு இளைஞர் முன்னெடுப்பு அமைப்பால் 2023 ஆம் ஆண்டுக்கான இளைஞர் மாநாடு வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு இளைஞர் முன்னெடுப்பு அமைப்பினுடைய பணிப்பாளர் சுந்தரலிங்கம் காண்டீபனின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

போர் முடிவடைந்து ஒரு தசாப்தம் நிறைவடைந்த நிலையில் அரசியல் தேவைகளுக்காக இனங்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தி முரண்பாட்டை ஊக்குவிப்பதற்கான பல சாதகமான தன்மைகள் சமூகத்தில் காணப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் இலங்கை மக்கள் நிலையான சமாதானத்தை நோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் அநீதி மற்றும் நியாயமற்ற தன்மைக்கு உட்பட்டவர்களுக்கு உண்மையைக் கண்டறிய ஆவண செய்வதுடன் அவர்களது வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் தொடர்பாக அந்த மாநாட்டில் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன் பறிக்கப்பட்ட நீதி மற்றும் நியாயத்திற்காக ஒன்றாகக் குரல் கொடுக்கும் சகோதர பிணைப்பு மூலமாக உண்மை மற்றும் நீதியைக் கண்டறியும் பயணத்தின் முதற்கட்டமாக பல முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன.

இந்த முன்மொழிவுகள் அடங்கிய பிரதி நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு இளைஞர் அமைப்பால் வழங்கி வைக்கப்பட்டது.

மாநாட்டில் அரசியல் கட்சிகளினுடைய பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களினுடைய பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டதுடன் கருத்துக்களையும் முன்வைத்தனர்.









## இமயமலைப் பிரகடன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டனத்துக்குரியது. உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பைச் சேர்ந்த ஒரு சிலர் பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் கொச்சைப்படுத்தும் முகமாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்."

– இவ்வாறு ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"உலகத் தமிழர் பேரவை அமைப்பைச் சேர்ந்த ஒரு சிலர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடாது அவர்களது அனுமதியைப் பெறாமல், தன்னிச்சையான அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது வேதனைக்குரியது. புலம்பெயர் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்டிக் கொண்டு எமது ஒட்டுமொத்த அரசியல் அபிலாஷைகளையும் தவறாக வழி நடத்திச் செல்லும் இந்த நடவடிக்கையை நாங்கள் நிராகரிக்கின்றோம். இந்த நடவடிக்கையானது அவர்களது சொந்த நலன்களைப் பூர்த்தி செய்வதற்கு தமிழ் மக்களின் அரசியலைப் பலிக்கடாவாக்கும் செயற்பாடா என்று சந்தேகம் கொள்ள வேண்டியுள்ளது.

ஈழத் தமிழர்களால் தமது அரசியல் அபிலாஷைகளை அடைவதற்காக நமது தேசத்தில் அயராத முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் நடவடிக்கைகளுக்குப் புலம்பெயர் அமைப்புகள் ஆதரவாகச் செயற்பட வேண்டுமே தவிர அவற்றை மலினப்படுத்துகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் நேரடியாக ஈடுபடுவது வருத்தம் அளிக்கின்றது.

அவர்கள் முன் வைத்திருக்கும் பிரகடனத்திலே மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பகிர்வதற்கே புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கூறி இருப்பது வேடிக்கையானது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல் இலக்கையே புரிந்து கொள்ளாதவர்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்களின் இறுதி அரசியல் தீர்வு என்பது சமஷ்டி முறையான ஆட்சியமைப்பாகவே இருக்க முடியும் என்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மாறாத கொள்கையோடு தொடர்ந்தும் பயணித்து வருகின்றது . அந்த அரசியல் தீர்வுக்கான பேச்சில் கலந்துகொள்ள அரசால் அழைப்பு விடுக்கப்பட்டபோது, நல்லிணக்க நடவடிக்கையாக ஏற்கனவே அரசியல் யாப்பில் இருக்கும் அதிகாரங்களைப் பகிர்ந்து தேர்தல்களை நடத்துமாறு நாங்கள் அரசிடம் கோரியுள்ளோம். அதன் அடிப்படையில் பேச்சுகளும் நடந்தன. இந்த நேரத்திலே புதிய அரசியல் யாப்பு, மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பகிர்வதற்காக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று முன்வைக்கின்ற கோரிக்கை அபத்தமானதும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையைக் குழிதோண்டிப் புதைக்கும் ஆபத்தான நடவடிக்கையும் ஆகும்.

ஒருசிலரின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களுக்காகத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை மலினப்படுத்தும் நடவடிக்கைகளில் புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் ஈடுபட வேண்டாம் என்று நாங்கள் கோரிக்கை வைப்பதோடு, நமது கண்டனத்தையும் பதிவு செய்து கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## மின்துண்டிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு முழுவதும் மின் துண்டிப்பு ஏற்பட்டமை தொடர்பில நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மின் துண்டிப்பு தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சு மட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று ஒரு மின் விநியோகக் கட்டமைப்பு மாத்திரம் செயலிழந்திருந்தால் எவ்வாறு முழு நாட்டுக்கும் மின்சாரம் இல்லாமல் போயிருக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொழில்நுட்ப ரீதியாக ஆராய வேண்டிய விடயம் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இதுவரை நாம் மின் உற்பத்தியை நுரைச்சோலை அனல் மின் நிலையம் மூலம் முன்னெடுக்கின்றோம். அதன் மூலம் 300 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஏனைய அனைத்து மின்சாரத்தையும் நாம் நீர் மின் உற்பத்தி மூலமே பெற்று வருகின்றோம். அந்தவகையில் சீரற்ற காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி விநியோக கட்டமைப்பிலேயே இந்தச் செயலிழப்பு இடம்பெற்றுள்ளது.

அந்தச் சந்தர்ப்பத்தில் 1500 மெகாவோட் மின்சாரத்திற்கான கேள்வி இருந்தது. எனினும், 300 மெகாவோட் மின்சாரமே இருந்தது. அச்சமயம் நுரைச்சோலை மின் விநியோகக் கட்டமைப்பும் செயலிழந்தது. அந்தவகையில் அனைத்து விநியோகக் கட்டமைப்புகளும் செயலிழந்தன.

இவற்றை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கு சுமார் 4 மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. சிறு மின் உற்பத்தி நிலையங்கள் மூலமே நிலைமையைச் சரி செய்ய முடிந்தது. மின்சார சபையும் எரிசக்தி, மின்சக்தி அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.




அதேவேளை நாம் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவிருந்த பொல்பிட்டிய, கொத்மலை ஆகியவற்றின் நடவடிக்கைகள் வருடக்கணக்கில் தாமதமாகின.

அதனால் ஏன் இந்தளவு காலதாமதம் ஏற்பட்டது என அது தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். இதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. இரண்டு தினங்களுக்கு முன் 5 இலட்சம் பேருக்கு மின்சாரம் இல்லாமலுள்ளது என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன.

எனினும், இந்த வருடத்தில் அனைத்து நாட்களும் எந்தத் தடையுமின்றி நாம் மின்சாரம் வழங்கினோம். எதிர்பாராத விதமாகவே இந்தச் செயலிழப்பு ஏற்பட்டது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்தவகையில் மிகவும் சுயாதீனமாகவும் நேர்மையாகவும் அதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை நாம் பொறுப்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்." – என்றார்.

## பதுளையில் மண்சரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கெலிபனாவல, கலபொட மலைப்பகுதியில் நேற்று முற்பகல் ஏற்பட்ட பாரிய மண்சரிவால் 11 வீடுகள் சேமடைந்துள்ளன.

அந்தப் பகுதியில் வசித்த 31 குடும்பங்களைச் சேர்ந்த 141 பேர் நேற்றுமுன்தினமே வெளியேற்றப்பட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இடம்பெயர்ந்தவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் மீன்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கல்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடைய தங்கவேல் தங்கத்துரை, 56 வயதுடைய கந்தையா புண்ணியராசா ஆகிய இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் கல்மடு கடற்கரையில் இருந்து பைவர் இயந்திரப் படகில் கடலில் மீன்பிடிப்பதற்காகச் சென்றுள்ளனர்.

இருவரும் இன்னமும் கரை திரும்பவில்லை என்று உறவினர்கள் கல்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கல்குடா பொலிஸார், கடற்படையினர் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் தேடுதலை முன்னெடுத்து வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஈகோ மனநிலை வேண்டாம்!

பொதுவாகவே மனிதர்களுள் இருக்கும் 'ஈகோ' மனநிலை சுமுகமான உறவையோ மகிழ்ச்சியான சூழலையோ உருவாக்கு வதில்லை. சின்னச் சின்ன விடயங்கள் சிலரின் ஈகோவைத் தொட்டுவிடும். உதாரணமாக கூட்டத்தில் கண்டபோது சிரிக்கவில்லை, அவராக வந்து பேசவில்லை, என்னைக் கண்டவுடன் எழுந்திருக்கவில்லை, திருமண அழைப்பதில் பெயர் போடவில்லை, எனக்குச் சொல்லிவிட்டுச் செய்யவில்லை, நான் வேண்டாம் என்று சொல்லியும் செய்துவிட்டார், இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

இவை சாதாரண எமது வாழ்க்கையில், குடும்ப உறவில், நட்பில் பல சிக்கல்களைக் கொண்டு வந்துவிடும்.

இதே நிலைமைதான் பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் சமய, அரசியல் செயற்பாடுகளிலும் நடக்கின்றது. அது ஒரு பொது நோக்கத்திற்காக செய்யப்படும் விடயமாக இருந்தாலும் தனக்கு வணக்கம் வைக்கவில்லை என்பதற்காக அந்தச் செயற்பாட்டிற்கு ஆதரவு வழங்காத நிலைமையே காணப்படுகின்றது. அத்துடன் எமது பிரச்சினையின் நீண்ட, நெடிய வரலாற்றில் இவ்வாறு ஈகோ மனநிலையினால் நாம் பல இழப்புகளையும் தோல்விகளையும் சந்தித்துள்ளோம். பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுள்ளோம் . 'எனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு இரண்டு கண்களும் போக வேண்டும்' என்ற மனநிலையிலேயே இவ்வாறான ஈகோ பிடித்தவர்கள் நடந்து கொள்வார்கள். சில இடங்களில் தவறான புரிதல்களும் இந்த ஈகோ மனநிலை உருவாக காரணமாகி விடுகின்றது. சிலர் தலைமைகளுக்கு ஈகோ மனநிலையை உருவாக்கி, தமக்குச் சாதகமாக தலைமைகளைத் தவறாக வழிநடத்திய வரலாறுகளும் எமக்கு உண்டு. ஆரம்பகால அஹிம்சை போராட்டம் காலம், அதன் பின்னரான ஆயுதப்போராட்ட காலம் என இந்த ஈகோ பிரச்சினை தொடர்ந்து தற்போதும் நீடிப்பது தமிழ் மக்களின் சாபக்கேடு.

தமது சுயலாப அரசியலுக்காக அப்பழுக்கற்ற உயிர் தியாகங்களைப் பயன்படுத்துவதும், இலகுவாக துரோகி பட்டங்கள் சூட்டுவதும், ஏதாவது பொது முயற்சிகள் செய்தால் அதன் பின்புலமாக, உளவுப்பிரிவுகள், அரசியல் தலைமைகள், கட்சிகள், அரசாங்கம், ஜனாதிபதி இருக்கலாம் என விமர்சனங்கள் சூட்டுவதும் இதன் தொடர்ச்சியே.

பொது செயல்பாடு அல்லது முயற்சி குறித்தான விமர்சனங்களை ஆழமாக ஆராய்ந்தால், பல வேளைகளில் ஆரம்பத்தில் நாம் கூறிய அந்த வணக்கம் வைக்காத ஈகோவை தொடுகின்ற ஏதாவது செயற்பாடு ஒன்று இருக்கும்.

இப்போது கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டமைப்பாக இல்லாமல் பிரிந்து நிற்பதற்கும், தமிழரசு கட்சியின் தலைமைத்துவ போட்டிக்கும், தலைமைத்துவ தெரிவின் பின் கட்சி பிளவுபடும் என்கின்ற வதந்திச் செய்திக்கும் பின்னால் யாரோ ஒருவரின் சுயலாப அரசியல், மற்றும் யாரோ ஒருவரின் ஈகோ உள்ளமையை அடையாளம் காணலாம்.

அதேபோல தீர்வு பற்றிய முயற்சி மற்றும் தமிழ் மக்களின் ஏனைய தேவைகள் பற்றிய விடயங்களில் பொது அமைப்புகள், புலம்பெயர் அமைப்புகள், சிவில் சமூகத்தவரின் முயற்சி என்பது காலத்தின் தேவையாகும். ஒன்றும் முயற்சிக்காமல் இருப்பதை விட முயற்சி செய்வது மேல். சிலரின் ஈகோ மனநிலை இவ்வாறான முயற்சிகளுக்கு தடையாக வந்துவிடக்கூடாது. அதேபோல இவ்வாறான முயற்சிகள் 'விழலுக்கு இறைத்த நீராக' போய்விடக் கூடாது என்பதில் நாம் அக்கறையாக இருக்க வேண்டும்.

'உலகத் தமிழரின் உறவுப்பாலம்' என்ற மகுட வாக்கியத்தோடு வெளிவருகின்ற 'முரசு'க்கும் அந்த அக்கறையுண்டு.

எனவே அந்த உரிமையோடு சில அவதானங்கள் குறித்து நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். எதிர்காலத்தில் அனைவரையும் ஒன்றிணைத்த செயல்பாடாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது அது இன்னும் பலன் தரும் விதமாக அமையும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.

பல தசாப்தங்களாக பிரச்சினைகளுடன் கூடிய சூழ்நிலையிலே வாழ்கின்ற தமிழர்களின் சுபீட்சத்துக்காக பலர் பல வழிகளை நாடுகின்றனர். ஈகோ மனநிலைகளை விடுத்து அவர்களின் முயற்சிகளை தட்டிக் கொடுப்பதோடு, வழிநடத்துவோம். ஊர் கூடி தேர் இழுப்போம். வாருங்கள்!



# சிநேகபூர்வ இருபது-20 கிரிக்கெட் காவத்தைமுனை மில்லத் வெற்றி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

வாழைச்சேனை, காவத்தமுனை மில்லத் விளையாட்டுக்கழகத்திற்கும், அர் ரஸாத் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான சிநேகபூர்வ இருபது-20 கிரிக்கெட் போட்டியில் காவத்தைமுனை மில்லத் விளையாட்டுக்கழகம் 5 விக்கட்டுக்களால் வெற்றியீட்டியது.

ஓட்டமாவடி அமீர் அலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்படுத்தாடிய அர் ரஸாத் அணி, 20 ஓவர்களால் நிறைவில் 6 விக்கட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

அர் ரஸாத் அணி சார்பாக சர்ஜுன் 40 ஓட்டங்களைப் பெற்றார்.

பின்னர் பதிலுக்குத் துடுப்படுத்தாடிய காவத்தைமுனை மில்லத் அணி 18.5 ஓவர்களில் 5 விக்கட்டுகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

எஸ்.எப். ஸியாம் 43 பந்துகளை எதிர்கொண்டு 62 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டநாயகனாகவும் இவரே தெரிவானார்.



## மர்ஹூம் ஏ.ஸி.எம்.சாலிஹ் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம்

# சம்பியனானது பாலமுனை றைஸ்டார்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக்கழகம் நடத்திய மர்ஹூம் சாலிஹ் ஞாபகார்த்த கரப்பந்தாட்டப் போட்டியில் றைஸ்டார் வொறியர்ஸ் அணி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

பாலமுனை றைஸ்டார் விளையாட்டுக்கழக வீரர்களை கரப்பந்தாட்டத்தில் ஊக்குவிக்கும் வகையில் பாலமுனை விளையாட்டு மைதானத்தில் மின்னொளி கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில், றைஸ்டார் கிங் அணியும், றைஸ்டார் வொறியர்ஸ் அணியும் மோதின.

இதில், றைஸ்டார் வொறியர்ஸ் அணி வெற்றிபெற்று சம்பியனானது.



இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பொறியியலாளர் எம்.என்.நதீம் கலந்துகொண்டார். ஏனைய அதிதிகளாக முன்னாள் கழகத் தலைவர்களான ஐ.எல்.எம்.பாயிஸ், ஆசிரியர் ஏ.எல். ஜெஸ்மீர், ஏ.ஹில்மி, கழக செயலாளர்களான எம்.ஏ.சிபான், ஏ.ஆர் சிஹாப், எம்.ஏ.றினாஸ், எம்.ஏ. சஜிர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



## பருத்தித்துறைக் கடற்பரப்பில் கைதான

# 25 இந்திய மீனவர்களும் 22 வரை விளக்கமறியலில்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுக் காவல் (ரோந்து) நடவடிக்கையின்போதே 25 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அவர்களின் இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்பின்னர் அவர்களைக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக பருத்தித்துறை பதில் நீதிவான் முன்னிலையில் கடற்படையினர் முற்படுத்தினர்.

இதன்போதே 25 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.




# வீடு புகுந்து ஏ.ரி.எம். அட்டையை திருடிய இளைஞர் ஒருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வீடொன்றினுள் புகுந்து பெண்ணொருவரை அச்சுறுத்தி அவரது வங்கி அட்டையைத் (ஏ.ரி.எம்.) திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த இளைஞர், வீட்டில் தனிமையில் இருந்த யுவதியை மிரட்டி, அவரிடம் இருந்த வங்கி அட்டையை திருடிச் சென்றுள்ளார்.

அது தொடர்பில் யுவதியால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை திருடப்பட்ட வங்கி அட்டையைப் பயன்படுத்தி, பல்பொருள் அங்காடி ஒன்றில் இளைஞர் ஒருவர் பொருட்களைக் கொள்வனவு செய்ததை அறிந்தனர்.

அதற்கமைய விசாரணைகளை முன்னெடுத்து மேற்படி இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# சத்தீஸ்கர் மாநில புதிய முதல்வராக பழங்குடியினத் தலைவர் தேர்வு!



சத்தீஸ்கர் மாநிலத்தின் புதிய முதல்வராக பழங்குடியின தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான விஷ்ணு தியோ சாய், தேர்வு செய்யப் பட்டுள்ளார். இதன்மூலம் மாநிலத்தின் அடுத்த முதல்வர் யார் என்று ஒரு வாரத் துக்கும் மேலாக நிலவி வந்த கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்து முடிந்த சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் 54 இடங்களில் புதிதாக தேர்ந்தெடுக்ப்பட்ட பா.ஜ.க. எம்.எல்.ஏக்களின் முக்கியக் கூட்டம் ராய்ப்பூரில் நேற்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் விஷ்ணு தியோ சாயை முதல்வராக தேர்ந்தெடுக்கும் முடிவு எடுக்கப்பட்டதாகவும், பழங்குடி மக்கள் அதிகம் உள்ள மாநிலத்தில், பழங்குடியினத்தைச் சேர்ந்த ஒருவர் முதல்வராக இருக்க வேண்டும் என்ற பிரதமர் மோடியின் கருத்துப்படியும் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நடந்து முடிந்த சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் குங்குரி தொகுதியில் போட்டியிட்ட விஷ்ணு தியோ சாய், 87 ஆயிரத்து 604 வாக்குகளுடன் வெற்றி பெற்றார். 59 வயதாகும் விஷ்ணு தியோ, பா.ஜ.கவின் சித்தாந்த வழிகாட்டியான ஆர்.எஸ்.எஸ். அமைப்பால் மிகவும் விரும்பப்படுபவர். மேலும் மாநிலத்தின் செல்வாக்கு மிகுந்த பா.ஜ.க. தலைவரான முன்னாள் முதல்வர் ராமன் சிங்குக்கு மிகவும் நெருக்கமானவர்.

பிரதமர் நரேந்திர மோடியின் முதல் அமைச்சரவையில் எஃகு துறை இணை அமைச்சாராகவும், 16 ஆவது மக்களவையில் சத்தீஸ்கரின் ராய்கர் தொகுதி எம்.பி.யாகவும் இருந்துள்ளார். கடந்த 2020 - 2023-இல் சத்தீஸ்கர் மாநில பா.ஜ.க. தலைவராகவும் விஷ்ணு தியோ சாய் இருந்துள்ளார்.

முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து விஷ்ணு தியோ சாய் கூறுகையில், "இன்று பா.ஜ.க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் தலைவராக ஒருமன தாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். என்மீது நம்பிக்கை வைத்த பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி. நட்டா ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மோடியின் வாக்குறுதியின் கீழ் சத்திஸ்கர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக முழுமனதுடன் பாடுபடுவேன்.

மாநி லத்தின் முதல்வராக அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற பாடுபடுவோம். மக்களுக்கு 18 லட்சம் வீடுகள் வழங்குவதுதான் முதல் வேலை" என்று தெரிவித்தார்.

# மக்களவை தேர்தலில் தி.மு.கவுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## - அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவிப்பு

மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மக்களவை தேர்தலில் தி.மு.கவுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. சார்பில் துறைமுகம், ஆர். கே.நகர், திருவொற்றியூர், அண்ணாநகர் ஆகிய தொகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. அவற்றில் கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி பங்கேற்று நிவா ரண பொருள்களை வழங்கினார். முன்னதாக அவர் திருவொற்றியூரில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக் கையில்,

"வானிலை ஆய்வு மையம் விடுத்த எச்சரிக்கையை முதல்வர் அலட்சியப படுத்தி மெத்தனமாக இருந்ததால், சென்னையில் 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட சாலைகளில் மழைநீர் தேங்கி மக்கள் பாதிக்கப்பட்டனர். திமுக அரசு மக்களுக்கு சரியாக உதவவில்லை. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு மக்களவை தேர்தலில் தி.மு.கவுக்கு தக்க பாடம் புகட்டுவார்கள்.



கோவளம், அடையாறு, கொசஸ்தலை ஆகிய 3 ஆறுகளைசுத்தப்படுத்தி, 2 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் நீளத்துக்கு மழைநீர் வடிகால் அமைக்கும் 5 ஆண்டு திட்டத்தை அ.தி.மு.க. கொண்டுவந்தது. அதில் 1220 கிமீ நீளத்துக்கு வடிகால் கட்டப்பட்டது. பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதை கிடப்பில் போட்டுவிட்டு, தங்கள் பணியை சரியாக செய்யாமல் இப்போது எங்களை குறை கூறுகின்றனர்.

திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங் களில் சுமார் 7 ஆயிரம் ஏக்கர் பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கின. இவற்றுக்கு உரிய நிவாரணம் அறிவிக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலின் தாக்குதலில் 24 மணி நேரத்தில் 200 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் பலி



கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய படையினரின் மிலேச்சத்தன மான தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள் ளனர். 2300 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என பாலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒரு செய்தியாளர் கூட்டத்தில், அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் டொக்டர் அஷ்ரஃப் அல்-குத்ரா தெரிவிக்கையில்,

210 இறந்த உடல்கள் மற்றும் 2,300 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவ மனைகளுக்கு கொண்டு வந்ததாக கூறினார்.

மேலும், நோயாளர் காவுவண்டிகள் மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை இஸ்ரேல் தொடர்ந்து குறிவைத்து தாக்கி வருவதால், ஏராளமான காணாமல் போனவர்கள் இன்னும் இடிபாடுகளுக்கு அடியில் உள்ளனர், அவர்களை மீட்க முடியவில்லை என குறிப்பிட்டார்.

இஸ்ரேலிய இராணுவம் மருத் துவமனைகளையும் மருத்துவ ஊழியர் களையும் குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தியதாகவும், வடக்கு காசாவில் உள்ள கமல் அத்வான் மருத்துவமனையில் இஸ்ரேலிய படை யினர் சினைப்பர் தாக்குதல்களை மேற்கொண்டு பல கர்ப்பிணிப் பெண் களைக் கொன்றதுடன் பலரை காயப்படுத்தி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். வடக்கு காசாவில் வசிப்பவர்கள் “வீட்டிற்கு வீடு மற்றும் பாடசாலைகளில் அழிக்கப்படுகிறார்கள், மேலும் மருத்து வமனைகளின் முற்று கையின் விளைவாக காயமடைந்தவர்கள் இறக்க நேரிடுகிறது” என்று அல்-குத்ரா தெரிவித்துள்ளார்.

# நிவாரண பொருட்களை கொள்ளையடிக்கும் ஹமாஸ்: இஸ்ரேலிய பாதுகாப்புப் படை குற்றம்சாட்டுகிறது!



காசா மக்களுக்கு தேவையான நிவாரண பொருள்களை இந்தியா உள்பட பல்வேறு நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் அனுப்பி வருகின்றன.

இந்த நிலையில், காசாவில் பொது மக்களை தாக்கியதாகவும், சர்வதேச அமைப்புகள் வழங்கிய மனிதாபிமான பொருள்களை கொள்ளையடித்ததாகவும் ஹமாஸ் அமைப்பின் மீது இஸ்ரேலிய பாதுகாப்புப் படை குற்றம்சாட்டியுள்ளது.

மேலும், ஹமாஸ் அமைப்பினர் திருடும் காணொளிக்களை இஸ்ரேல் பாதுகாப்பு படை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப் பினருக்கும் இடையே கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் ஆரம்பித்து இரு தரப்பினரும் சரமாரியாக தாக்குதலை மேற்கொண்டு வந்தனர்.

இதில் ஏராளமான இராணுவ வீரர்களும், பொதுமக்களும் உயிரிழந்த நிலையில், கடந்த மாத இறுதியில் காசாவில் தற்காலிக போர் நிறுத்தம் கொண்டுவரப்பட்டது. இந்த தற்காலிக போர் நிறுத்தமும் டிசம்பர் 1ஆம் திகதி முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடங்கி உள்ளது.

வான்வழி, தரைவழி தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இதனால் மீண்டும் ஆயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்!

ஆப்கானிஸ்தானில் நேற்று நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

90 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.8 அலகுகளாகப் பதிவாகியுள்ளதாக அந்த மையம் குறிப் பிட்டுள்ளது.

நேற்று ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் உயிர் சேதமோ அல்லது பொருட்சேதமோ ஏற்பட்டதாக எந்த தகவலும் வெளியா கவில்லை.

வறுமை மிகுந்து காணப்படும் நாடான ஆப்கானிஸ்தானில் அடுத்தடுத்து நில நடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் ஹெறாத் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக் கத்தில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருந்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.12.2023




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். முன்னேற்றம் தாமதமாக ஏற்படும். இதனால் கவலை ஏற்படும். பயணங்கள் ஆறுதல் அளிக்கும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணிகளில் தவறுகள் நேரலாம். உங்கள் செயல் திறனைக் கண்டு மேலதிகாரிகள் அதிருப்தி அடைவார்கள்.

இன்று இருவரிடையே மகிழ்ச்சி காணப்படாது. மந்தமான மனநிலை காரணமாக இருவரும் மகிழ்ச்சியாக இருக்கும் நிலை காணப்படாது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தோல் அரிப்பு ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். உங்கள் சமயோசித புத்தி மூலம் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் செயல்திறன் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வோடு நடந்து கொள்வீர்கள். இது உறவை இன்னும் பலப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும்.காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும்.

உங்களின் திருப்தியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் விருப்பங்கள் மற்றும் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகளை இன்று நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற இயலும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நம்பிக்கையோடு வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கமும் பிணைப்பும் அதிகரிக்கும்.

நிதிநிலைமை இன்று பிரகாசமாக இருக்கும்.பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்களின் உறுதியான மன நிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




முக்கிய விஷயங்களை இன்று தொடங்குவதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். பிறருடன் பேசும் போது கவனம் தேவை. பிரார்த்தனை மூலம் அமைதி பெறலாம்.

இன்று பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. திறமையாக பணியாற்ற திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நன்மை காண பொறுமை அவசியம். இன்று உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் பேண இந்த உணர்வை தவிர்க்க வேண்டும்.

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். குடும்பச் செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனால் தன்னம்பிக்கை இழக்க நேரிடும். இதயம் கனப்பதாக உணர்வீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் செய்ய இயலாது. இதனால் கவலை ஏற்படும். சக பணியாளர்களுடனான உறவு முறை சிறப்பாக இருக்காது.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு பணம் கரையும். இன்று பணத்தை சேமிக்க இயலாது.

தொண்டை சம்பந்தமான பிரச்சினை மற்றும் தலை வலி காணப்படுகின்றது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் அக்கம்பக்கத்தினர்கள் ஆதரவாக இருப்பார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலனளிக்கும்.

உங்கள் செயல் திறனுக்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். உங்களின் அபாரமான திறமையைக் கண்டு சக பணியாளர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கான சிறந்த வாய்ப்புகள் உள்ளன. பங்கு போன்ற இதர வகைகள் மூலமாகவும் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் இருப்பீர்கள்.




இன்று வெற்றி பெறுவதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். எளிதில் வெற்றி காண்பதை கடினமாக உணரவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும். பாதுக்கப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். இதனால் பணிகளை திறமையாக செயல்படுத்த இயலாது.

உங்கள் உறவில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. உங்களின் நெருங்கிய நபர் ஒருவருடைய உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.




இன்று திருப்தி குறைந்து காணப்படும். கவனமாக திட்டமிட்டால் வெற்றி பெறலாம். முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் கடினமாக இருக்கும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தாமதங்களை தவிர்க்க முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உங்கள் மனதை மாற்றிக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டும். இதனால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க முடியும்.

அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக பண இழப்பு நேரலாம்.இன்று பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை ஆறுதல் தரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.12.2023



தனுசு

இன்று மந்த நிலையும் பாதுகாப்பி- ன்மை உணர்வும் காணப்படும்.ஆன்மீக ஈடுபாடு திருப்தியை அளிக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப் புள்ளது. பணிகளை ஒப்படைக்கும் முன்பு சரிபார்த்து தருவது சிறந்தது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். என்றாலும் அகந்தை உணர்வு தலை தூக்கும். அதனை தவிர்த்து இருவரும் மனம் திறந்து பேச வேண்டும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக் கும் செலவுகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள். இன்று அதிகமாக சேமிக்கவும் இயலாது.

இன்று ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும். உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.



கும்பம்

இன்று அபாரமான நாள். உங்கள் இனிமையான வார்த்தை உங்கள் நெருங்கிய உறவுகளை மகிழ்ச்சி யுறச் செய்யும். உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். சக பணியாளர்களுக்கு நீங்கள் உதாரணமாக இருப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையை வெளியிடங்களுக்கு அழைத் துச் செல்வதன் மூலம் அவருக்கு மகிழ்ச்சி உண்டாகும். நீங்கள் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இருவரும் சிறந்த ஜோடியாகத் திகழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். நிதிநிலை சுதந்திரமாக் இருக்கும். உங்களின் வங்கியிருப்பு அதி கரிக்கும்.



மகரம்

இன்று வளர்ச்சி காணப்படும். உங்க ளிடம் காணப்படும் தன்னம்பிக்கை மூலம் இலக்கில் வெற்றி பெறுவீர்கள். ஸ்திரமான முடிவுகள் வெற்றிக்கு வழி வகுக்கும்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்களின் நேர்மையான முயற்சி உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் இருவரும் நல்ல தொடர்புடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். வெளியிடங்களுக்கு சென்று ஒன்றாக இணைந்து மகிழ்ச்சியாக நேரத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பிற்காக ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். அத னால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



மீனம்

இன்று கவலையுடன் காணப்படு வீர்கள். இது உங்கள் மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வளர்ச்சியில் தாமதங்கள் காணப்படும். விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளை மேற்கொள்ளும் போது திட்டமிட வேண்டும். பணிச்சுமை அதிகமாக காணப்படும். வெற்றி பெறுவதற்கு திறமையாக கையாள வேண்டும்.

உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே சமநிலை யோடு இருந்து உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். சேமிப்ப தில் கட்டுப்பாடு காணப்படும். இந்தச் சூழ்நிலைகளை விவேகத்துடன் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES

KELSEY HOMES 40 Years Housing Excellence

+94777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# பலத்த காற்றுடன் கூடிய மழையால் உடைந்து விழுந்த விளம்பரப் பலகை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாக உள்ள பெரிய விளம்பரப் பலகை பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக உடைந்து வீழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதனால் கொழும்பு – பௌத்தாலோக மாவத்தையில் நேற்றுச் சில மணிநேரம் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது.





# மண்மேடு சரிந்து வீழ்ந்ததால் மலையக ரயில் சேவை தாமதம்

மலையக ரயில் சேவையில் நேற்று தாமதம் ஏற்பட்டது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ஹாலிஎல மற்றும் தெமோதரை ரயில் நிலையங்களுக்கு இடையில் மண்மேடு சரிந்து வீழ்ந்தது.

இதனால் மலையகத்துக்கான ரயில் சேவையில் தாமதம் ஏற்பட்டது என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மண்மேட்டை அகற்றும் பணிகள் நிறைவடைந்த பின்னர் ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது.





# உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று முக்கிய சந்திப்புக்களில்

(எஸ்.நிதர்ஷன்)

உலகத் தமிழர் பேரவையினர் நேற்று ராமநிக்காய பீடத்தினரைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியதோடு தாம் முன்னெடுக்கும் மக்கள் மயப்படுத்தப்பட்ட வேலைத் திட்டம் தொடர்பிலும் விரிவாக எடுத்துரைத்தனர்

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன்,

“இலங்கையிலுள்ள நான்கு பௌத்த பீடங்களில் ஒன்றாகிய ராமநிக்காய பீடத்தினரை உலகத் தமிழர் பேரவையினரும் பௌத்த பிக்குமார் அடங்கிய குழுவினரும் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினோம்.

இந்தச் சந்திப்பில் எம்மால் தயாரிக்கப்பட்ட இமயமலைப் பிரகடனத்தையும் கையளித்தோம்.

ராமநிக்காய பீடத்தின் துணைப் பொதுச் செயலாளர் ராமநிக்காய பீடம் தம்மவன்ச தேரர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு எமக்கு ஆசீர்வாதமும் தந்தார்,

சந்திப்பில் அவர்கள் தெரிவித்த கருத்து என்னவென்றால் இலங்கையில் அனைவரும் சமம் என்ற ஒரு நிலை ஏற்படும்போதுதான் நாட்டில் பொருளாதார மேம்பாடு மற்றும் ஏனைய விடயங்களில் மேம்பாடு ஏற்படுவதற்குச் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இலங்கையில் குறிப்பாக சமாதானம், சமதர்மம், நல்லிணக்கம் என்பன அனைவரும் சமம் என ஏற்கப்பட்டால் மாத்திரமே ஏற்படும். எனவே, மக்கள் மயப்படுத்தப்படுகின்ற இந்த வேலைத்திட்டத்துக்குத் தாங்கள் பூரண ஆதரவை வழங்குவதாகவும், மக்கள் மத்தியில் இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் போது வெற்றியளிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவையும் நேற்று நாம் சந்தித்து எமது வேலைத்திட்டம் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்தோம்.” – என்றார்.







# உடுப்பிட்டி மதுபானசாலைக்கு எதிராக தொடர் நடவடிக்கையில் ஈடுபட முடிவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – உடுப்பிட்டி பகுதியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீளவும் மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு எதிராக சமூக மட்ட அமைப்புகள் தொடர் நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர்.

உடுப்பிட்டி விநாயகர் சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் இந்த விடயம் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலாளர் நேரடியாகவும், வாய் மொழி மூலமாகவும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தனக்கு அறிவுறுத்தியதனால்தான் இடத்துக்கான சிபார்சை வழங்கியதாகக் குறிப்பிட்டதற்கு இணங்க சமூகமட்ட அமைப்புக்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மற்றும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆகியவற்றிலிருந்து ஐந்நூறு மீற்றர்களுக்கும் குறைவான தொலைவில் உடுப்பிட்டிச் சந்தியிலிருந்து நவிண்டில் நோக்கிய வீதியில் இமையாணன் மேற்கில், பிரதான வீதியிலேயே இந்த மதுபானசாலை அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இமையாணன் இ.த.க. பாடசாலையிலிருந்தும் நவிண்டில் தாமோதரா பாடசாலையிலிருந்தும் குறித்த மதுபானசாலை மிகக் குறைந்த தூரத்திலிருப்பதும் மாணவர்கள் மத்தியில் மதுபானப் பாவனையை ஊக்கப்படுத்திவிடும் என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# கிண்ணியா அருனலு குளத்தில் பெண் யானையின் சடலம் மீட்பு



திருகோணமலை மாவட்டம், கிண்ணியாவில் வான் – எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அருனலு குளத்தில் உயிரிழந்த நிலையில் யானையின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது என்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

யானையின் சடலம் தொடர்பில் அப்பகுதி விவசாயிகள், வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று யானையின் மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

8 வயது மதிக்கத்தக்க பெண் யானையே உயிரிழந்தது என்று கூறப்படுகின்றது.

இந்தநிலையில், யானையின் உயிரிழப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்காகக் கால்நடை வைத்திய அதிகாரியால் உடற்கூற்றுப் பிரேத பரிசோதனை இடம்பெறவுள்ளது என்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வான் – எல பொலிஸார் மற்றும் கந்தளாய் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.



# கிளாரியை சிறப்புத் தூதுவராக நியமியுங்கள்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம் வலியுறுத்து

(கி.வசந்தரூபன்)

இலங்கையில் தமிழர்களின் போராட்டங்களுக்குத் தீர்வு காணும் வகையில் கிளாரி கிளிண்டனைச் சிறப்புத் தூதராக நியமிக்க வேண்டும் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கம், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாக மேற்படி சங்கத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே போராட்டக்காரர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள்,

"மனித உரிமைகள் என்பது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உள்ளடக்கியது, வாழ்வதற்கான உரிமை, சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் கலாசாரத்தில் பங்கேற்கும் உரிமை, உணவுக்கான உரிமை, வேலை மற்றும் கல்வி பெறும் உரிமை உள்ளிட்ட சமூக, கலாசார பொருளாதார உரிமைகளை உள்ளடக்கியது.

இலங்கையில் உள்ள தமிழர்களின் வரலாறு 5 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலானது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, போர்த்துகீசிய ஆக்கிரமிப்பாளர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் மற்றும் இப்போது சிங்களர்களின் ஆட்சிக்காலம் முழுவதிலும் இந்த நிலைமை நீடித்து வருவது கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நீதி மற்றும் சமத்துவத்துக்கான தமிழர்களின் போராட்டம், அநீதிகள் மற்றும் மீறல்களை வரிசையாக எதிர்கொண்டது. அது அவர்களின் ஒட்டுமொத்த நலன்களை வெகுவாகக் குறைத்துள்ளது.

தமிழர் அல்லாத ஆட்சியாளர்களிடம் இருந்து விடுபட்டு மனித உரிமைகளை மீட்டெடுக்க நாம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். கொசோவா, போஸ்னியா, கிழக்கு திமோர் மற்றும் தெற்கு சூடான் போன்ற கடந்த கால நிகழ்வுகளில் பார்த்தது போல், சர்வதேச ஆதரவு எமக்கு முக்கியமானது. சுயநிர்ணய உரிமையை அடைவதற்கும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தமிழர்களான நாம் அவசரமாக உதவிகளை நாடி நிற்கின்றோம்.

எனவே, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் ஒரு நிலைப்பாட்டை எடுத்து எமது உரிமைகளை ஆதரிப்பது மிகவும் முக்கியமானது. எமக்கான பாதுகாப்பு, கண்ணியம், சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்தவகையில் செயலாளர் கிளாரி கிளின்டன் இலங்கையைப் பற்றி மிகவும் அறிந்தவர் என்றும், இந்தப் பணியை முன்னெடுப்பதற்கு அமெரிக்காவில் மிகவும் பொருத்தமானவர் என்றும் நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்."

– என்றனர்.






